# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,112 — 1960 අප්‍රේල් 22 වැනි සිකුරාදා — 22.4.1960

12,112 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**4 (1) ம் பிரிவின் கீழுள்ள கட்டளை**

**கட்டளை இலக்கம் 147**

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மொஹொட்ட லாகே டிங்கிறி பண்டா, உணவு, வர்த்தக வியாபார அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் எச்செம்மறி ஆட்டையோ, வெள்ளாட்டையோ எவ்வொருவரோ உணவு அதிகாரியால் வழங்கப்படும் உத்தரவுடனும் அவ்வுத்தரவுக்கிணங்கியும் அல்லாது இலங்கைக்குள் இறக்குமதி செய்யக்கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 22 ம் திகதி.

எம். டி. பண்டா,
உணவு, வர்த்தக வியாபார அமைச்சர்.

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. எம். எல். 1960/5 — **உப உணவுப் பொருட்கள் (மைசூர்ப் பருப்பு).**

**1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை நீக்கம்**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் பிரிவினைச் சேர்த்து வாசிக்குமிடத்து, உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) க்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பந்துல சோமசிரி த சில்வா ஆகிய யான் இக்கட்டளையால் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ம் திகதி வெளியான 12,045 ம் இலக்க இலங்கை அரசாங்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 19.1.1960 ம் திகதியைக் கொண்ட உப உணவுப் பொருட்கள் (மைசூர்ப் பருப்பு) சம்பந்தப்பட்ட எம். எல். 1960/2 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகின்றேன்.

1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 19 ம் திகதி பி. ப. 3 மணிக்கு மாத்தளையில் கையொப்பமிடப்பட்டது.

பந்துல எஸ். த சில்வா,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தளை மாவட்டம்.

---

உணவு விலைக் கட்டளை இல. KU/5/60 — **அரிசி (மொத்தமாகவும் சில்லறையாகவும்).**

**1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு குருநாகல் மாவட்டம் உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), வில்பிறெட் பிரான்சிஸ் பேடினன்டோ ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 17 ம் திகதி வெளிவந்த 11,777 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 12 ம் திகதியைக் கொண்ட KU/4/59 ம், KU/5/59 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையை உடனடியாக இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றை ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இந்த விலைக்குக் கூடுதலாக விற்றலாகாது ;

(3) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றல் ஆகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றுகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்கு கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான அரிசியை திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) ஒரு அந்தருக்கு குறைந்த எத்தொகையான அரிசியை பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல், சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஈ) ஒரு அந்தருக்கு குறைந்த எத்தொகையான அரிசியின் விலையை இக்கட்டளையால் ஒரு நிகர அந்தருக்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விலையிலிருந்து கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) குறித்த அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் விவரித்துள்ள எப்பொருளும் விற்கப்படும் இடத்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப் படுத்தப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 19 ம் திகதி பி. ப. 3 மணிக்கு குருநாகல் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

டபிள்யு. எவ். பேர்டினன்டோ,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
குருநாகல் மாவட்டம்.

## அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2<br>ஒரு நிகர அந்தர் அரிசியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>ஒரு நிகர இருத்தல் அரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>சதம் |
|---|---|---|
| குருநாகல் மாநகர சபை எல்லை .. | 13 69 .. | 13 |
| குளியாபிட்டி நகர சபை எல்லை .. | 14 2 .. | 13½ |
| பொல்கஹாவள பட்டின சபை எல்லை .. | 13 69 .. | 13 |
| கிராமச் சபை எல்லைகள் :— | | |
| அளவுவ .. .. | 13 69 .. | 13 |
| பிங்கிரிய .. .. | 15 9 .. | 14½ |
| போயாகன .. .. | 13 91 .. | 13½ |
| டம்படெனிய .. .. | 14 53 .. | 14 |
| தொடன்கஸ்லன்த .. .. | 14 42 .. | 13½ |
| துமலசூரிய .. .. | 14 64 .. | 14 |
| கொகரல்ல .. .. | 14 53 .. | 14 |
| ஹம்மன்கல்ல .. .. | 14 92 .. | 14½ |
| ஹெடிபொல .. .. | 15 3 .. | 14½ |
| ஹிரிபிடிய .. .. | 14 64 .. | 14 |
| ஹொறம்பாவ .. .. | 14 70 .. | 13½ |
| கலுகமுவ .. .. | 14 75 .. | 14 |
| கனேகம .. .. | 14 75 .. | 14 |
| மாகன்துர .. .. | 14 81 .. | 14 |
| முறுதுங்கே .. .. | 14 30 .. | 13½ |
| நாரம்பல .. .. | 14 25 .. | 13½ |
| பன்னல .. .. | 14 53 .. | 14 |
| பீடும் .. .. | 14 8 .. | 13½ |
| பிலெஸ்ஸ .. .. | 14 2 .. | 13½ |

| பத்தி 1 | பத்தி 2 ஒரு நிகர அந்தர் அரிசியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை ரூ. ச. | பத்தி 3 ஒரு நிகர இருத்தல் அரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை சதம் |
|---|---|---|
| பொல்கஹவள | 13 55 | 13 |
| பொதுஹெர | 13 91 | 13½ |
| றம்பொடகல்ல | 14 47 | 14 |
| உடுபத்தாவ | 14 36 | 13½ |
| வாரியப்பொல | 14 36 | 13½ |
| வெல்லவ | 13 97 | 13½ |
| வேவுட | 14 19 | 13½ |
| அம்பான்பொல | 14 41 | 14 |
| பலல்ல | 14 13 | 13½ |
| இஹெடுவவ | 15 3 | 15 |
| கல்கமுவ | 14 53 | 14½ |
| மஹாநன்நேரிய | 15 3 | 15 |
| மாஹோ | 14 2 | 13½ |
| நிகாவரட்டிய | 14 64 | 14 |
| பொல்பிடிகம | 14 53 | 14 |
| தம்பறம்புவ | — | 14½ |

---

உணவு விலைக் கட்டளை இலக்கம் ஜே/22/1960. உப உணவுப் பொருட்கள் (மைசூர்ப் பருப்பு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்களிக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) யாழ்ப்பாண மாவட்டம், செல்லையா நிற்குணனந்தன் ஆகிய யான் இக்கட்டளையால், 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ம் திகதி வெளிவந்த 12,048 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ம் திகதியைக் கொண்ட ஜே/21/1960 என்னும் இலக்கமுள்ள மைசூர்ப் பருப்புச் சம்பந்தப்பட்ட எனது விலைக் கட்டளையை உடனடியாகவே நீக்கிவிடுகிறேன்.

1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 19 ம் திகதி பி.ப. 3.05 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் கைச்சாத்திடப்பட்டது.

செ. நிற்குணனந்தன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
யாழ்ப்பாண மாவட்டம்.

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.